உ
சிவமயம்



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்
கொண்டவரான மாணிக்க மைந்தர்

## உயர்திரு. மாணிக்கம் பாக்கியநாதன்

சமாதான நீதவான் – உப தபாலதிபர்
அவர்களது நீங்காத நினைவுகளுடன் சமர்ப்பிக்கும்

# பாச மலர்

13.10.2005

உ

சிவமயம்

# சமர்ப்பணம்





அன்புள்ளம் கொண்ட எங்கள்
குடும்பத் தலைவருக்கு இம்மலர்
சமர்ப்பணம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
தவறாது எல்லோருக்கும் நல்லவராய்
வாழ்ந்து, வழிகாட்டி விசவத்தனை
முருகனின் பாதாரவிந்தங்களில்
சேர்ந்துவிட்ட எங்கள் அன்புத்
தெய்வத்தின் பாதக் கமலங்களுக்கு
இம்மலர்
காணிக்கை

இங்ஙனம்

குடும்பத்தினர்கள்

பண்ணாகம்
*12.11.2005*

உ



மலர்வு
23.09.1938

உதிர்வு
13.10.2005

# அமரர்
# மாணிக்கம் பாக்கியநாதன்
### சமாதான நீதவான், உப தபாலதிபர்.

## திதி வெண்பா

மாமயில் ஏறிடும், மாலவன் மருகனிடம்
மாணிக்கம் பாக்கியநாதனவர் மேதினியில்
மன்னுபுகழ் பார்த்தீப புரட்டாதி துவாதசியில்
ிண்ணுலகம் சென்றார் விரைந்து



அமரர் மா. பாக்கியநாதன் அவர்கள் குடும்பத்தினருடன்

உ
சிவமயம்



# தோத்திரத்திரட்டு

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்பு டைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணிநீ இம் முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## திருவாசகம்

அம்மையே அப்பாஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறு சமயங்கள் மாளப்
பேதகம் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றியான் செய்
பாதகம் அனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி

## திருப்புகழ்

உம்பர் தருதேனுமணக் - கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் - துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் – பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத் - தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் - கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானைமுகப் - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்



# இவர் தான் பாக்கியநாதன்

பண்ணாகத்து மண்ணிலே பல சரித்திரம் போற்றிடும் உத்தமர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து புகழுடன் மறைந்து விட்டார்கள். இந்த பண்புள்ள மண்ணிலே பிறந்து,வளர்ந்து சிறப்படைந்த ஒரு மாமனிதர்தான் இந்த பாக்கியநாதன்.

இவரின் பரம்பரையே ஒரு தனிப் பெருமை கொண்டதாகும். இற்றைக்கு 172 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த இவர் முதாதையரான "கதிர்காமர் விசுவநாதர்" என்பவர்தான் விசவத்தனை முருகப் பெருமானுக்கு மடாலயம் அமைத்தவராவர். இப்பெரியாருக்கு ஒன்பது பிள்ளைகளில் ஒருவர்தான் "சின்னட்டியார்" இவர் இவ்மடாலயத்தில் கந்தப்புராணப்படிப்பு, திருவிளையாடற் புராணப்படிப்பு" என்பன முழுமையாக நடைபெற்று வருவதற்கு ஒழுங்குகள் செய்து, சிறப்புற நடாத்தி வந்தார். இவருக்கு கிடைத்த செல்வக் குழந்தைகள் ஐந்தாகும். அவர்களுள் நாகமுத்து என்னும் நல்லார் இரண்டாவது மகனாகப் பிறந்தார். மூத்த மகனாகப் பிறந்த "செல்லப்பா" அவர்கள் மிகவும் ஊக்கத்துடன் செயற்பட்டு பல பொருட் செலவு செய்ததுடன், ஊரவர்களின் ஒத்துழைப்புடன் மடாலயம் இருந்த இடத்தில் கர்ப்பக்கிருகம், மகாமண்டபம், வசந்தமண்டபம் என்பனவற்றை ஆகமவிதிப்படி அமைத்து 1922ம் ஆண்டு கும்பாபஷேகம் செய்து கொடியேற்றி தேர் தீர்த்தத் திருவிழாக்களை நடாத்தி ஆண்டுதோறும் திருவிழாக்கள் ஒழுங்காக நடைபெற வழியமைத்தார்.

50 ஆண்டுகளுக்கு மேலாக தர்மகத்தாவாக இருந்து அரும்பாடுபட்டு சேவை செய்து வந்த திருவாளர் செல்லப்பா அவர்கள் 1942 ம் ஆண்டு விசவத்தனை முருகனின் பாதாரவிந்தங்களில் இணைந்து விட்டார்.

அதன் பின் அடுத்த வாரிசாக அவர் தம்பியாகிய "நாகமுத்து" அவர்கள் கோவில் தர்மகத்தாவானார். "மாரிமுத்து" என்பவர் நாகமுத்துவின் அன்புமனையாளாக இணைந்து கொண்டார். இவர்கள் இருவரின் இணைப்பினால் தோன்றிய பிள்ளைச் செல்வங்கள்

திருமதி பொற்கொடி கனகசபை, திருமதி தங்கம்மா செல்லையா, திருவாளர்கள் மாணிக்கம், கந்தசாமி, ஆசைமுத்து ஆகிய ஐவரும் ஆவர். இவர்களுள் மூத்த மகனான மாணிக்கம் அவர்கள் பெயரில் மட்டுமல்லாது ஊரவரின் மதிப்பிலும் அவர் மாணிக்கம் தான்.

தந்தையாரின் பின் தன்னிடம் ஒப்படைக்கப் பெற்ற முருகன் கோவில் பரிபாலனத்தை எதுவித இடையூறுமின்றி சீராக நடைபெற வேண்டும், விசவத்தனை முருகன் ஆலயம் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற உயர் நோக்குடன் ஆலயத்தின் முழுநிர்வாகப் பொறுப்பையும் பரிபாலன சபையிடம் ஒப்புக்கொடுத்து புண்ணியம் தேடிக் கொண்டவரானார். முருகனடியாரான மாணிக்கம் அத்தோடு நில்லாது தானும் அச்சபையில் இருந்துகொண்டு வாழ்நாள் வரை தொண்டு செய்து வந்தார் இப் பெரியார்.

உயர்ந்த உள்ளம் கொண்ட மாணிக்கம் அவர்களுக்கு திரு.இளையதம்பி பொன்னையா என்பவரின் மகளான "மீனாட்சிப்பிள்ளை" என்னும் நல்லிதயம் கொண்டவரை மணமுடித்து வைத்தார்கள். இவர்கள் நல் இன்ப வாழ்வில் மூத்தமகனாக பாக்கியநாதன், இரண்டாவது மகனாக இரகுநாதன், மூன்றாவது மகளாக நகுலேஸ்வரி என்னும் மூன்று செல்வங்கள் பிறந்தனர்.

வாகனங்கள் சொந்தமாக வைத்து தொழில் செய்து வந்த மாணிக்கம் அவர்கள் கமமும் செய்துவந்தார். சிறுவயதில் பெற்றோருக்கு மிகவும் உதவியாக இருந்து தோட்டவேலை செய்து வந்ததுடன். தோட்டவேலை முடிந்ததும் பாடசாலைக்கு நேரம் தவறாமல் செல்ல வேண்டும் என்பதற்காக ஓடி, ஓடிச் செல்வார். தனது இளமைக் கால வாழ்க்கையையும் இன்றைய இளைஞர் வாழும் வாழ்க்கையும் ஒப்பிட்டுப் பார்த்து நண்பர்களுடன் விமர்சிப்பார்.

அந்த நாளில் எதுவரை படித்தால் அரச உத்தியோகம் கிடைக்குமோ அதுவரை படித்தார்.தனக்கு புரியாததை புரிந்து கொள்வதற்காக தனது சிறிய தந்தையாரான முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் -->

அவர்களின் சகோதரர் திரு.திகம்பரலிங்கம் அவர்களிடம் இவரும் இவரது சிறியதந்தையாரின் மகனான திரு.கந்தசாமி சீனிவாசகம் அவர்களுமாக இரவில் சென்று கற்று வந்தனர். இதன் பயனாக சித்தியெய்தினார். அப்பொழுது கூட அவர் தந்தையாருடைய தொழிலுக்கு உதவி செய்யத் தவறில்லை.

ஆரம்ப கல்வியை பண்ணாகம் மெய்கண்டானில் ஆரம்பித்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தொடர்ந்து படித்து சித்தி எய்திய அவர் கொழும்புக்கு சென்று "லீலா" அச்சியந்திரசாலையில் வேலை செய்து வந்தார். அந்த காலத்தில் கொழும்பு சென்று என்ன வேலை செய்தாலும் அது ஒரு பெருமதிப்பாகக் கொள்ளப்பட்டது. இக் காலத்தில் வெளிநாடு எப்படியோ அப்படித்தான் கொழும்பில் அன்று வேலை செய்வதும். ஏனோ அவருக்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. பின்னர் சில காலம் பண்டாரவளையில் "வல்லிபுரம் அன் சன்சில்" வேலை செய்து அதையும் விட்டு ஊர் வந்து சேர்ந்தார். அதன் பின்னர் இவரது பெரிய தந்தையாராகிய மலாயன் ஓய்வூதியர் திரு. செல்லப்பா கிருஷ்ணர் அவர்களால் சித்தங்கேணியில் நடத்தப்பெற்று வந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் பணிபுரிந்து வந்தார்.

பண்ணாக கிராமத்திற்கு ஓர் உப தபாற்கந்தோர் தேவை என்ற நிலை உருவாகியது. அதன் உப தபாலதிபராக 1960ம் ஆண்டு பதவியேற்று ஓய்வு பெறும் வரை எதுவித குறைபாடுகளும் இல்லாத சிறந்த உப தபாலதிபராக கடமையாற்றி வந்தார். கடமையாற்றிய காலத்தில் அவர் செய்த சேவைகள் பல. "இன்று கையடக்க தொலைபேசியினால் நிமிடத்தில் செய்திகளை உலகம் முழுக்க அனுப்பிவிடலாம். பக்கத்துவீட்டிலே என்ன நடந்தது என்று கூட தெரியாமல் இருக்கும் அயல்வீட்டார் வெளிநாட்டில் இருந்துதான் சில செய்திகளை அறிய முடிகின்றது". அவ்வளவு உலகம் சுருங்கி விட்டது. ஆனால் அன்று 30 ஆண்டுகளுக்கு முன்னர் அப்படியல்ல 250 மைல்களுக்கப்பால் உள்ள கொழும்புக்கு தொலைபேசி எடுப்பதென்றால் பண்ணாகம் உப தபாலதிபரைத்தான் பலரும் நாடி வருவார்கள். காரணம் எந்த நேரத்திலும் இவரது உதவியைப் பெறலாம் என்பதால்தான். எந்த நடுச்சாமம் என்றால் என்ன எதுவித மனக்கஷ்டமுமின்றி தூக்கத்தையும் -

இறந்து செய்தி அறிவிக்க வருபவருடன் சென்று அச்செய்தி சொல்லி முடியும் வரை பொறுமையாக நின்று அறிவிப்பதில் என்றுமே தயங்கியதில்லை இவர்.

எத்தனையோ பேரை கட்டாயமாக சேமிக்க பழக வேண்டுமென்று வற்புறுத்தி சேமிப்பு பழக்கத்தை உருவாக்கி 50 சதம் முதல் ஆயிரம் ரூபாய் வரை சேமிக்கப் பழக்கி வழிகாட்டியவர் இவர்.

பிள்ளைகளுக்கு மணப்பருவம் வந்ததறிந்த பெற்றோர்கள் இளையமகள் நகுலேஸ்வரிக்கு திரு.அ.சீவரத்தினம் அவர்களையும், பாக்கியநாதன் அவர்களுக்கு பரமேஸ்வரி என்னும் பெயருடைய இராசாத்தியையும், இரகுநாதன் அவர்களுக்கு சர்வேஸ்வரி எனும் பெயருடைய ஆச்சிப்பொன்னுக்கும் முறையே மணமுடித்து வைத்து மகிழ்வுடன் வாழ்ந்து முருகனடியில் சேர்ந்துவிட்டனர்.

இவர் தன் கடமையில் ஒருநாள் என்றாலும் நேரம் தாழ்த்தி வேலைக்கு சென்றதில்லை. வீட்டில் என்ன வேலை இருந்தாலும் தனது கடமையில் நேரம் தவறாத கட்டுப்பாட்டை அவரது ஓய்வு பெறும் நாள்வரை தவறவிட்டதே இல்லை. அவரிடம் உதவியாளர்களாக இருந்த பலர் இன்றும் மேலான பதவிகளில் தபால் திணைக்களத்தில் பணிபுரிகின்றார்கள்.

"என்னுடையது என்னுடையதே" "உன்னுடையது உன்னுடையதே" "என்னது உனக்கல்ல" "உன்னது எனக்கல்ல" இது இவரது சித்தாந்தம். அடுத்தவர் பொருளில் ஆசைப்பட்டவரும் அல்ல. தன்னுடைய பொருளையும் வீணே இழக்கவும் விரும்பாதவர்.

இலட்சாதிபதியின் மருமகனாக இருந்தும் தன் இலட்சியத்தைக் விட்டுக் கொடுக்காது இலட்சிய புருஷராக வாழ்ந்தவர்.

அன்பான மனைவி, இவர் ஏகபுத்திரன் மயூரன் இருவரையும் இருகண்போல உள்ளன்புடன் நேசித்து வாழ்ந்தார். கோபம் கொண்டு ஏசினாலும் பின்னர் ஏன் அப்படி நடந்துகொண்டேன் என்று தன்னுள் வேதனைப்படுவதுடன் பின்னர் எதுவுமே நடக்காத மாதிரி சமாளித்து விடுவார்.

மகன் மயூரன் தன் தந்தையாரின் தந்தையாரைப் போலவே வாகனங்களில் விருப்பமுள்ளவனாகி சொந்தமாக சிற்றூர்தி வைத்திருந்து தானே சம்பாதிக்கத் தொடங்கிய பின்னர் அவனும் திருமணவயதுக்கு வந்துவிட்டான் என்பதை உணர்ந்து கொண்டார்.

தனது மகன் காதலிக்கத் தொடங்கிவிட்டான் என்பதை தெரிந்து கொண்டால் சரியோ, பிழையோ அவன் எண்ணத்துக்கு மாறாக வேறு வழி பார்ப்பதைத் தான் அநேகமான தாய் தந்தையர் செய்வார்கள். ஆனால் இவரோ தன் மகனின் "மனம் கொண்டதுதான் மாளிகை" என்று தீர்மானித்து அவன் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று திடமானமுடிவை எடுத்தார். இவரின் அந்த நல்ல முடிவின்படியே காதலித்தவனே கணவன் "என்றுமே பிரியாத வாழ்வு வேண்டுமென்று" தன் காதலன் மயூரனின் கரம்பற்றினாள் மங்கை நல்லாள் வதனி. மாமன் மாமியின் நல்லாசியுடன் மணம் புரிந்து மழலை செல்வமாக "அபிநயன்" அபியைப் பெற்றுக் கொடுத்து இவர் பெயர் விளங்க பேரனை வழங்கினர். மகிழ்ந்தார்கள் அனைவரும். அவர்களுடன் இணைந்து வதனியின் தந்தை, தாய், சகோதரங்கள் அனைவருமே உறவு கொண்டாடி மகிழ்ந்து ஒன்றாக வாழ்ந்து வருகையில்

"கண்பட்டதால் உந்தன் மேனியிலே
புண்பட்டதோ அதை யாம் அறியோம்"

சாதாரணமாக சயிக்கிளில் செல்பவர் அன்றும் சயிக்கிளில் செல்கையில் விதி விளையாடியது, விபரீதம் நடந்தது, கால் தொடைக்கு மேல் உள்ள பூட்டு கழன்று உடைந்து விட்டது, வைத்தியசாலையில் பல நாட்கள் படுக்கையில் இருந்தவர், தனது கருமங்களை தாமே செய்து முடிக்கக் கூடிய வகையில் சற்றே சுகமாகி வீடுவந்தார்.சில நாள் பயிற்சியின் பின்னர் ஒருநாள் மீண்டும் விதி சதி செய்தது. வீட்டு வாசலில் படியில் தவறி விழுந்து வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டார். பலநாள் படுக்கையில் கிடந்த அவரின் தேவைகளை அவரது மகன் மயூரன் ஓய்வின்றி பூர்த்தி செய்து வந்தான். மனைவி இராசாத்தியின் அன்பான உபசரிப்பும், மருமகள் வதனியின் கனிவான கண்காணிப்பும்,

பேரன் "அபி"யின் மழலை மொழியாலும் மீண்டும் வீடு வந்து சேர்ந்தார். எழுந்து நடமாட முடியாத நிலை. மகன் மயூரன் பல வைத்திய ஆலோசகர் உதவியுடன் இவரை எழுந்து நடமாட வைக்க பெரும் முயற்சி எடுத்தான். ஆனாலும் தன்னுள்ளே, அவருள்ளே எழுந்த இயலாமை என்னும் மன உறுத்தலால் அவரால் எழுந்து நடமாடவே முடியவில்லை. ஊரில் யாராவது இறந்துவிட்டால் "நானும் விரைவில் இறந்து விடுவேன்" என்பார். வருபவர் இதைக்கேட்டு கண்ணீர் வடிப்பர்.

"தன்னையே அவர் இழந்தார்" அநேகருக்கு அறிவுரைகள் சொன்னவர் பின் விளைவுகள் பற்றி சிந்திக்காது நேர்மை ஒன்றையே குறியாகக் கொண்டு வாழ்ந்தவர். மனதில் தோன்றியதை ஒழிவு மறைவின்றி ஒரு நொடியில் வார்த்தையால் வெளிப்படுத்துபவர். காரியமாற்றுவதில் சிறந்தவர், கணக்கில் வல்லவர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாதவர், மனம் திறந்து சிரிப்பவர், சமாதான நீதவான் பட்டம் பெற்றும் பகட்டில்லாமல் வாழ்ந்தவர். செல்வம் இருந்தபோதும் செருக்குக் காட்டாதவர், புண்பட்ட நெஞ்சங்களுக்கு புனித வாழ்வு காட்டியவர், தன் சாவு 67 வயதில் என்று அடிக்கடி தன் அன்பர்களுக்கு சொல்லி ஆதங்கப்பட வைத்தவர், உத்தமனாக வாழ்ந்தவர்.

12-10-2005 தனது அன்பு பேரன் "அபி"யின் பிறந்தநாள். மறுநாள் எதுவுமே பேசமுடியாமல் தடுமாறினார் "சளி என்ற சனி" அவர் நெஞ்சிலே நின்றது வைத்தியர் பார்வையில் அவர் நிலை புரிந்தது. அன்பு மனையாள் அது சாதாரண வருத்தம் தான் மாறிவிடும் என்றிருந்தார். மகன் மயூரனோ உள்ளே உளமார அழுதான். மருமகளோ தேம்பினாள், சகோதரன் இரகுநாதனோ வெதும்பி கண்ணீர் வடித்தார். சகோதரி நகுலேஸ்வரியும் கண்ணீர் விட்டார். எல்லாரின் கண்ணீரும் அவருக்கு பன்னீரானது. அந்தக் கண்ணீர் என்னும் பன்னீரில் வாய்பேச முடியாத நிலையில் நனைந்தார். அவர் 13–10–2005 காலை 3.30 மணிக்கு கரம்பிடித்து காலமெல்லாம் சேர்ந்து வாழ்வோம் என நம்பி இருந்த மனைவியின் அலறலுடன் வந்த கண்ணீர் என்னும் செந்நீரில் கரைந்து அமரராகிவிட்டார்.

இவர் பற்றி நிறைய தெரிந்தவர்கள் இன்னும் எழுதுவார்கள். உண்மையில் எத்தனையோ உள்ளங்களின் மனதில் நிறைந்து வாழ்ந்து வந்த இவர் மறைந்தாலும் உண்மையில் இவர்தான் பாக்கியவான். எல்லோரின் அன்பிற்கும் மரியாதைக்கும், மதிப்பிற்கும் உரித்தாகி வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த "இவர்தான் பாக்கியநாதன்"

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கிருஷ்ணார்ப்பணம்

| | |
|---|---|
| தந்தை | :- நாகமுத்து மாணிக்கம் |
| தாய் | :- பொன்னையா மீனாட்சிப்பிள்ளை |
| பிறப்பு | :- 23.09.1938 |
| சகோதரர் | :- இரகுநாதன், நகுலேஸ்வரி |
| தொழில் | :- உப தபாலதிபர் - பண்ணாகம் |
| திருமணம் | :- 1969 |
| மனைவி | :- இராமலிங்கம் பரமேஸ்வரி |
| மாமன் | :- வைரமுத்து இராமலிங்கம் |
| மாமி | :- இராமலிங்கம் தங்கம்மா |
| மைத்துனர் | :- இ.போகீந்திரன் |
| மைத்துனிகள் | :- து.மகேஸ்வரி, வி.நாகேஸ்வரி |
| சகலர் | :- ம.துரைசிங்கம் , விஜயகுமார் |
| மகன் | :- மயூரன் |
| மருமகள் | :- வதனி |
| பேரன் | :- அபிநயன் |
| சம்பந்தி | :- கனகசபை செல்வரத்தினம்<br>செல்வரத்தினம் ஞானேஸ்வரி |

# அழாதவர்கள் யார்?

## மனைவி – *எதை நினைத்து அழுவது........*

பொட்டிட்டு பூவுமிட்டு புதுமகளாய் உனை
அடைந்த நாளினை நினைந்தழுவனோ
கட்டிலும் தொட்டிலும் காதலித்து என்னுடன்
வாழந்ததை நினைந்தழுவேனோ
மட்டில்லா மகிழ்வுடன் மயூரனைத் தந்த
நின் மாண்பினை நினைந்தழுவனோ
நாட்டிலே என்னை நடுவில் தவிக்கவிட்டு
இடையிலே சென்றதை நினைந்தழுவனோ

“அன்பரே எதை நினைந்து அழுவேன் நான்.”

## மகன் - *என் செய்வேன் ......*

வழி தவறி சென்றிடாது வழிகாட்டி
நின்றீர்
பழி ஏதும் வந்திடாது விழி காத்து
வளர்த்தீர்
களிப்புடனே என் வாழ்வு
மிளிரும்போது
விழிமூடிப் பறந்தீரே அப்பாவே என்
செய்வேன் யான்

## மருமகள் - *தவறேது செய்தேன்*

என்ன மாமா தவறு செய்தேன்
எனைவிட்டு ஏன் போனீர்
கண்ணின் கருமணியாய்
கருதி உமைக் கண்டேனே
என்னாளும் மாமியை வதனி
எங்கே எனக் கேட்பீர்
இன்னாளில் உமைப்பிரிந்து
ஏங்கவோ விட்டுச் சென்றீர்

**சகோதரன் சகோதரி** – *சாவே உனக்குச் சாவில்லையோ....*

சாவே உனக்குச் சாவில்லையோ....
சடுதியில் பறித்தாயே அண்ணன் உயிர்
பூப்போன்ற அவர் உள்ளம்
புரியாதோ உந்தனுக்கு
ஏக்கத்தால் வாடுகின்றோம்
ஏன் அவரைக் கொன்றுவிட்டாய்
பார்க்கத் துடிக்கின்றோம் பாசத்தால் தவிக்கின்றோம்
அவருயிரை மீண்டும் தருவாயோ

**பேரன்** - *மடி மீது நான் தூங்க...!"*

யார் யாரோ எல்லாம் தோள்மீது தூக்கி
தாலாட்டு தான்பாடுறார்
ஊர் எல்லாம் கூடி ஒருமித்து நின்று
உன் புகழ் பாடுறார்.
பார் தாத்தா நீ பக்கத்தில் இல்லாமல்
தனிமையில் உனைத் தேடுறேன்
கூறு தாத்தா எங்கே நீ சென்றுவிட்டாய்
வா தாத்தா உன்மடிமீது நான் தூங்கவே

ஊரும் உறவுகளும் - *"ஆதரித்தே அணைக்கும்"*

அன்புடனே உறவுகளை ஆதரித்தே அணைக்கும்
பண்புடை பாக்கிய நாதனே
துன்பமுடனே உன்னில்லம் தேடியே வந்துநாம்
இன்னல்கள் சொல்லியழுதால்
கண்ணியமிக்க நல் கருத்துக்கள் கூறியே
காரியம் வென்று தருவாய்
என்பெல்லாம் உருகுதே ஏக்கமிகவாகுதே
ஏன் எமைப்பிரிந்து சென்றாய்

**தேற்றம்**

எல்லார்க்கும் பொதுச் சொத்தாம் இறப்பென்று
நல்லார்க்கும் பொல்லார்க்கும் தெரிந்ததொன்றெ
நல்லோராய் வாழந்து பல நன்மை செய்து
எல்லோரும் நலம் வாழ்வோம் இறை பக்தி கொண்டு.

கிருஷ்ணாப்பணம்

# எப்பிறப்பில் காண்பேன் இனி

எங்கள் குடும்பத்தில் மூத்தவராக பிறந்து எமக்கு பெருமை எல்லாம் சேர்த்து வைத்து சென்ற என் அருமை உடன் பிறப்பான அண்ணாவைப் பற்றி எழுதுவதோ, சொல்லுவதோ எனக்கு பெருமைதான்.

சின்னஞ் சிறுவயதில் சேர்ந்து நாங்கள் ஒன்றாக கோவில் கட்டி விளையாடிய விளையாட்டுக்களை எண்ணிப் பார்க்கின்றேன். எனக்கு கணக்குப்படிப்பிப்பதில் அவருக்கிருந்த ஆற்றலைக் கண்டு நான் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளேன் கணக்கு போடும் போதே விடையும் அவருக்கு தெரிந்துவிடும் திறமையே திறமை. எனது திருமணம் 1972 இல் நடந்த போது அதற்காக அவர் செய்த சேவைகளை நினைத்துப்பார்க்கின்றேன்.1980 ஆம் ஆண்டு இ.போ.ச வேலை நிறுத்தத்தின்போது அடிக்கடி எமது வீடுவந்து எமது குடும்ப நிலையை அறிந்து செய்த உதவிகளை எண்ணிக் கலங்குகின்றேன்.

அதுமட்டுமன்றி தான் விரும்பியநேரமெல்லாம் வீடுவருவார் சுகநலம் விசாரிப்பார். ஏதாவது புத்திமதி சொல்லவும் தயங்காமல் நேரிலேயே சொல்லுவார். ஊருக்கெல்லாம் உயர்ந்தவரான என் அண்ணா இப்படி 67 வயதில் இறப்பார் என்று நான் ஒருபோதும் எண்ணவில்லை 13-10-2005 அதிகாலை 3.30 மணிக்கு கேட்ட மோட்டார் சயிக்கிளின் ஓசை என் நெஞ்சில் இடிபோல் பாய்ந்தது. என் அண்ணாவுக்கு ஏதாவது என்று..... எண்ணும் போதே துரைராஜின் குரல் எனது அண்ணா மாண்ட செய்தியை அறிவித்தது. என்ன செய்வது என்றுதெரியாது நானும் என் மனைவியும் கதறி அழுதோம். சிறிது நேரத்தில் எனது மகன் மணிவர்ணனும் மனைவி தேவதாவும் ஓலமிட்டு அழுது கொண்டு வந்தனர் எல்லோருமாக அண்ணாவீட்டுக்குச் சென்றோம். பரலோகம் சென்று விட்டார் அண்ணா, அவர் ஆன்மாவை காவிய உடல் பிணமாகக் கிடந்தது. அழுதோம் அழுதோம் இன்னும் உள்ளே அழுது கொண்டுதான் இருக்கின்றோம். இப்படி ஒரு அண்ணாவை எப்பிறவியில் காண்பேன் இனி.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்புத் தம்பி
மா.இரகுநாதன்

# செயல் வல்லன்

அமரர் பாக்கியநாதன் அவர்கள் செயல்திறன் மிக்கவர் எமது ஆலய பரிபாலன சபையிலே உபதலைவராக இருந்து பல நல்ல ஆலோசனைகள் வழங்கியவர். அமரர் அவர்கள் எமது ஊரவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். உபதபால் அதிபராக இருந்த காலத்திலே கந்தோருக்கு வருபவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்துள்ளார். தந்தி நடைமுறை இருந்தபொழுது தானே அந்த பத்திரத்தை நிரப்பி கையொப்பத்தை மட்டும் அதற்குரியவர் வைக்க வேண்டியிருந்தது.

ஆங்கிலத்திலே விலாசம் எழுத தெரியாதவர்களுக்கு தானே அவர்களுடைய கடிதத்தில் ஆங்கிலத்தில் விலாசம் எழுதிக் கொடுப்பார். அமரர் தமது ஊரிலுள்ள அநேக அமைப்புக்களிலும் நிர்வாகத்திலிருந்து உழைத்துள்ளார். உதாரணமாக சிறீமுருகன் அன்னதான சபை, கிராம அபிவிருத்திச்சங்கம், பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கம் ஆகியன குறிப்பிடக் கூடியவையாகும். இந்த மாதிரிச் செயல்கள் செய்த காரணத்தினால் அரசாங்கத்தினாலே சமாதான நீதிவான் பட்டம் வழங்கப்பட்டது. இந்த கௌரவம் அவருக்கு வழங்கியது சரியாக இருக்கிறது. அவரின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்தோடு அன்னாரது ஆத்மா விசவத்தனை முருகன் கழலடியினை சேர்வதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலன சபை
பண்ணாகம் விசவத்தனை
முருகமூர்த்தி கோயில்

*அந்த அன்புக் குரல் இனி எப்போது கேட்கும்*

## அமரர் மாணிக்கம் பாக்கியநாதன் அவர்கள்

(சமாதான நீதிவான் ஓய்வு பெற்ற தபாற் கந்தோர் அதிபர்)

உடன் பிறவாச் சகோதரர் அமரர் மாணிக்கம் பாக்கியநாதன் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு நாம் அதிர்ச்சி அடைந்தோம். எனது பெரிய தகப்பன் அமரர் மாணிக்கம் அவர்களின் சிரேஷ்ட புதல்வன்தான் அமரர் பாக்கியநாதனாவார். இவர் என்னிடம் மிகுந்த அன்பு உடையவர். இவர் என்னை எப்போது எங்கு கண்டாலும் அன்புடன் தம்பி என்றுதான் அழைப்பார். என்றுமே பெயர் சொல்லி அழைக்கமாட்டார். நானும் அண்ணர் என்று தான் அழைப்பேன். என்னில் அளவு கடந்த பாசம் உள்ளவர் நான் வர்த்தகக் கல்வியில் ஈடுபடுவதற்கு அண்ணர் தான் காரணமாக இருந்தார். நான் சிறுவயதில் நடந்து தான் பாடசாலை செல்வேன். இவர் துவிச்சக்கரவண்டியில் வருவார். நான் நடந்து செல்வதைக் கண்டால் தனது வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்வார்.

அண்ணரும்நானும் இரவில் படிப்பதற்காக சிறியதந்தையார் வீடு போவோம், நான் இரவு நேரத்தில் கோவிலடியால் போகப் பயப்படுவேன் காளி கோவிலடியால் தான் போகவேண்டும்.இக்கோயிலடிக்குப் போக எனக்கு மிகப்பயம். நான் முன்னுக்குப் போக அவர் பின்னுக்கு வருவார். இவருக்கு துணிவு ஓர் கலை.

பெரிய தந்தையார் அமரர் மாணிக்கம் அவர்களை தெரியாதவர்கள் இல்லை.இவர்களின் குலதெய்வம் தான் விசவத்தனை முருகப்பெருமான். விசவத்தனை முருகப் பெருமானின் ஆலயத்தின் முதலாளியாக இருந்தார். இவர் தனியத்தான் ஆலயத்தை பரிபாலித்தார். தனிய ஓர் ஆலயத்தை பரிபாலிக்க முடியாமையை உணர்ந்த இவர் ஊரில் உள்ள பெரியவர்கள், கல்விமான்களை அழைத்து ஓர் தர்மகத்தா சபையை உருவாக்கி கோவிலை ஒப்படைத்தார். ஒப்படைத்த பின்பு கோவில் மனேச்சராக இருந்து கோவில் நிர்வாகத்தை நடத்தினார். கோவில் வளர வேண்டும் என்பதற்காக இவர் செய்தது பெருமைக்குரியதாகும்.

இவர் மற்றைய அயல் ஊர்களுக்கு முன்மாதிரியாக செய்து காட்டினார்.

அண்ணர் பாக்கியநாதன் அவர்கள் தபாற் கந்தோரில் வேலை செய்த காலத்திலும், ஓய்வு பெற்ற காலத்திலும், ஊரில் உள்ள மன்றங்கள், சங்கங்கள் போன்றவற்றில் நிர்வாகக் கடமைகள் செய்தார். நாற்பது ஆண்டுகளுக்கு முன் பண்ணாகம் தபாற் கந்தோருக்கு தொலைபேசி எடுத்த பெருமை இவரையே சாரும். இவரது பொதுப்பணியை அறிந்த அரசினர் இவருக்கு " சமாதான நீதிபதி" என்ற பட்டத்தை வழங்கினர்.

பண்ணாகம் கிராமத்தில் துக்க நிகழ்ச்சிகளில் கலந்து பல உதவிகளைப் புரிவார். இவர் இனத்தவர்களுடன் சந்தோஷமாக அந்நியோன்யமாக வாழ்ந்தார். பகைமை பாராட்டமாட்டார்.

இவரின் குரலில் 'தம்பி' என்ற வார்த்தையை இனி எப்போது கேட்போம்?

ஓர் நல்ல அண்ணரை இழந்து தவிக்கும், அவரது மனைவிக்கும், பிள்ளைக்கும், மருமகளுக்கும், பேரனுக்கும், சகோதரர்களுக்கும், இனத்தவர்களுக்கும் ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.
24.10.2005

திரு. திருமதி சீனிவாசகம்
சமாதான நீதவான்
20 கரம்பைக் காடு, வவுனியா



# போஸ்ட் மாஸ்டர் பாக்கியநாதன்

போஸ்ட் மாஸ்டர் பாக்கியநாதன் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அமரர் பாக்கியநாதன் பண்ணாகம் தபால் அதிபராகப் பல காலம் சிறப்பாக சேவையாற்றினார். இதை எழுதுபவரின் தந்தையும் ஒரு தபால் அதிபராக மலேசியாவில் கடமையாற்றியவர். அவ்வகையில் தபால் அதிபரின் தொழிலின் மேன்மையைப்பற்றி அவர் நன்கு அறிவார்.தபால் அதிபர்கள் அதிகமாக எந்தவித ஊழல் குற்றச் சாட்டுக்கும் ஆளாகதவர்கள். தபால் அதிபர் பாக்கியநாதன் நான் அறிந்த வரையில் தன் தொழிலின் மகத்துவத்தை காப்பாற்றி சிறப்பாக சேவை செய்தார். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை மனதிலிருத்தி கண்ணியமாக கடமையாற்றியதை எல்லோரும் அறிவர்.

பண்ணாகம் அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியில் நான் பல காலம் பற்று வரவு வைத்திருந்தேன். அப்போது பணம் வைப்பிலிடும் போதும் மீள எடுக்கும் போது நான் எதுவித கஷ்டப்படவில்லை.அதற்குக் காரணம் அமரர் பாக்கியநாதன் மிகுந்த கண்ணியமாகச் செயற்பட்டமையே. நேரம் தவறாது அலுவலகத்துக்கு வந்து கடைமையை மேற்கொள்வார். வாடிக்கையாளர்கள் அதிகமாக இருந்தாலும் மிகுந்த பொறுமையுடன் நிதானமாக செயற்படுவார். பணவிஷயத்தில் மிகுந்த கவனமாக இருப்பார். நான் எனது தாயாரின் ஓய்வூதியத்தை அமரர் பாக்கியநாதனிடமிருந்து பல வருடங்கள் பெற்றுள்ளேன். எக்காலத்திலாவது அவர் என் தாயை நேரில் வந்து ஓய்வூதியத்தைப் பெறும்படி கூறவில்லை என் மீது வைத்திருந்த நம்பிக்கையே அதற்குக் காரணம்.

அமரர் பாக்கியநாதன் எனக்குப் பெறாமகன். அவருடைய தந்தை மாணிக்கம் எனக்கு ஒன்றுவிட்ட அண்ணன் முறையானவர். அதுமட்டுமல்ல அவரது சகோதரன் திரு இரகுநாதன் எனது சகோதரியின் மகள் சர்வேஸ்வரியை மணம்முடித்தவர்.அந்தவகையில் அமரர் பாக்கியநாதனுக்கும் எனக்கும் இருந்த குடும்ப உறவு மேலும் நெருக்கமடைந்தது. எக்காலத்திலும் எங்கள் உறவு நெகிழ்வடையவில்லையென்று பெருமையடைகிறேன்.

அமரர் பாக்கியநாதனின் தந்தை மாணிக்கம் விசவத்தனை முருகன் ஆலய முகாமையாளராக இருந்தார். ஆலயத்தின் முன்னேற்றம் வளர்ச்சி என்பதை மனதிலிருத்தி ஆலயத்தைப் பரிபாலன சபையிடம் கையளித்தார். அவர் செய்த செய்கை அவரைப் பரோபகாரியாக்கியது. அவர் ஆலயத்தை பரிபாலனசபையிடம் மனமுவந்து பெருந்தன்மையுடன் கையளிக்காவிட்டால் ஆலயம் இன்று அடைந்திருக்கும் வளர்ச்சியைக் கண்டிருக்காது. இவ்வகையில் அமரர் மாணிக்கம் செய்த செய்கை அவரின் மக்களுக்கும் பெருமையைக் கொடுக்கும். விசவத்தனை ஆலயம் உள்ள வரைக்கும் அமரர் மாணிக்கம் நினைவிலிருப்பார்.

அமரர் பாக்கியநாதன் அவர்கள் கிராமத்தின் பல சங்கங்களிலும் பொறுப்புள்ள பதவிகளை வகித்த கிராம வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். தானுண்டு தன் குடும்பமுண்டு என்றிராமல் பல பொது நிறுவனங்களில் அங்கம் வகித்த தனது நேரத்தையும் சிரமத்தையும் பாராமல் அருந்தொண்டாற்றியிருக்கின்றார். அன்னதானசபை, கிராம முன்னேற்றச் சங்கம், கடன் உதவி சங்கம் என்பவற்றில் தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற பதவிகளையேற்று அப்பழுக்கற்ற சேவையை செய்திருக்கின்றார். அவரது சேவையில் நன்கு மதிக்கப்பட்டதால் அவருக்கு சமாதான நீதவான் என்றும் பதவி கிடைத்தது. இறுதிக்காலம் வரை தனக்கு வழங்கப்பட்ட பதவிக்கு இழுக்கு ஏற்படாத வகையில் செயற்பட்டு தனக்கும் தனது கிராமத்துக்கும் புகழைத் தேடியிருக்கிறார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்பதற்கேற்ப தனது தந்தையால் தானடைந்த புகழுடன் தனது கண்ணியமான வாழ்க்கையால் தானீட்டிய புகழுடன் பூரணவாழ்வு வாழ்ந்து அமரத்துவம் அடைந்திருக்கின்றார். அவருடைய ஆத்மா அவரின் குலதெய்வமான விசவத்தனை முருகன் பாதத்தில் அமைதி நிலையை அடைவதாக!

சி.ஞானச்சந்திரமூர்த்தி
ஓய்வு பெற்ற ஆசிரியர்
ஸ்கந்தவரோயக் கல்லூரி
சுன்னாகம்.

# சேவையால் உயர்ந்த செம்மல்

இப்பூமியில் பிறப்பென ஒன்று இருக்கும் வரை இறப்பும் இருந்தே ஆகும். இது இயற்கையின் நியதி மட்டுமல்ல இறைவனின் தீர்ப்புமாகும். ஜனனமும் மரணமும் வாழ்வின் நியதி இருப்பினும் சிலருடைய வாழ்வும் இறப்பும் மனிதமனங்களை உலுப்பி விடுகின்றன. இதற்குக் காரணம் இவர்கள் தமக்காக மட்டுமன்றி தம்மைச் சார்ந்த சமூகத்திற்காகவும் வாழ்ந்தமையே

இந்தவகையில் நோக்கும்போது அமரர் பாக்கியநாதன் அண்ணருடைய வாழ்வும், மரணமும் நம்மில் பலரின் நெஞ்சத்தை நெகிழ வைத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. போஸ்ட்மாஸ்ரர் (Post Master) என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமரரை கடந்த 40 ஆண்டுகாலமாக நன்கு அறிவேன். 1960 களின் பிற்பகுதியில் அரசாங்க உத்தியோகங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக வர்த்தமானி (Gazzette) பார்ப்பதற்காக அன்னாரின் அலுவலகத்திற்கு செல்லும்போதெல்லாம் அன்பாக கதைத்து பல அறிவுரைகள் கூறுவார். அமரரின் உதவியால் நானும் அந்நாட்களில் பதியப்பட்ட பதிவாளராக (Registerd Substitute) நியமிக்கப்பெற்று இப்பிரதேசத்தில் இருக்கின்ற பல உப தபாலகங்களில் கடமையாற்றினேன்.

அமரர் அவர்கள் தன் சேவைக்காலத்தில் கல்வியறிவு குறைவாக இருந்த பலருக்கும் படிவங்கள், கடிதங்கள் எழுதிக் கொடுத்து உதவுவார். இதன் காரணமாக பலரும் பண்ணாகம் போனால் எதையும் சுலபமாக செய்விக்கலாம் என்று எண்ணி இவரை நாடி வருவதை நான் கண்டேன். நேரம், காலம் பாராது, சினம் கொள்ளாது, சிரமம் நோக்காது, தொலைபேசித் தொடர்புகளைப் பெற்றுத் தருவதில் இவருக்கு நிகர் இவரே.
1995 இல் இடம் பெற்ற இடப்பெயர்வின்போது அன்னாரின் குடும்பத்தினர் கரவெட்டியில் இருந்தனர். நான் அவரிடம் சென்று நாங்கள் இருப்பதற்கு ஒரு இடம் ஒழுங்கு செய்து தருமாறு கேட்டபோது அவர் எவ்வித தயக்கமும் இன்றித் தன்னுடன் வந்திருக்குமாறு கூறி அரவணைத்தார். இக்காலப்பகுதியில் நாங்கள் எவ்வித முரண்பாடுகளும் இன்றி இருந்ததற்குக் காரணம் எம்மிடையே இருந்த அன்பும்

புரிந்துணர்வுமேயாகும். அந்நாட்கள் என்றும் நினைவில் நிலைத்திருக்கும்.

அன்னார் எங்கள் கிராமத்தில் உள்ள பல பொதுப்பணி அமைப்புக்களில் பல முக்கிய பதவிகள் வகித்து மக்களுக்காகச் சேவை புரிந்தவர். தன் வாழ்நாளில் அரைவாசிக்கும் மேற்பட்ட காலத்தை பண்ணாகம் தெற்கு ஐ.நா.சங்கத்தின் வளர்ச்சிக்காய் அர்ப்பணித்தவர். அவர்கள் தான் சார்ந்த பொது அமைப்புக்களின் நடைமுறைகளை ஒருபோதும் மீறி நடந்ததில்லை. பொதுப்பணத்தைச் செலவு செய்வதில் சம்பந்தப்பட்ட ஏனைய உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தே செலவு செய்வார். ஒரு ரூபாவைக் கூட அனாவசியமாக செலவு செய்ய மாட்டார்.

அமரர் அவர்கள் பண்ணாகம் தெற்கு ஐ.நா.சங்கப் பொருளாளராக இருந்த காலத்தில் ஒருமுறை தனது கணக்கில் ஏற்பட்ட குறைவை ( Shortage) தனது சொந்தப் பணத்தின் மூலம் நிவர்த்தி செய்தார். இது அன்னாரின் பெருந்தன்மைக்கும், கண்ணியத்திற்கும் ஒரு எடுத்துக் காட்டாகும். எங்கள் கிராமத்தின் சரித்திரத்தில் அரசினால் நியமிக்கப்பட்ட முதல் சமாதானநீதிவான் என்ற பெருமையை அமரருக்கே உரியதாகும். அவர் ஒருபோது பதவிகளை நாடிச்சென்றதில்லை. பதவிகள் அவரை நாடி வந்தன இது அவரின் சேவைக்கு எடுத்துக்காட்டாகும். இப்பிரதேச மக்களிடையே நன்மதிப்பும் நம்பிக்கையும் பெற்ற நல்ல மனிதனாக வாழ்ந்த அமரர் அவர்கட்கு ஏற்பட்ட சிறுவிபத்து இவ்வளவு விரைவாக அமரரைக்காவு கொள்ளும் என்று எவரும் எண்ணியிருக்கவில்லை.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வாழ்ந்த என் பெரு மதிப்பிற்குரிய அன்னாரின் இழப்பு எம் எல்லோருக்கும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் மனைவி மகன் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும். ஆறுதல் கூறி அன்னாரின் ஆன்மா எங்களின் குலதெய்வமரிகய விசவத்தனை வேலவனின் திருப்பாதங்ளைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பண்ணாகம்

அன்பன்
ச.சிவராஜன்

# அவர் நல்லவர்

என் சகலன் பாக்கியநாதன் அவர்களை அறியாதார் எவருண்டு. இவ்வளவு விரைவில் அவர் இவ்வுலகில் இருந்து விடை பெறுவார் என்று நான் எண்ணவில்லை. ஒரு சொல்லில் அவரைப்பற்றி சொல்வதானால் "அவர் மிகவும் நல்லவர்". அவர் எனக்கு சகலனாக மட்டும் இருக்கவில்லை. நண்பனாகவே இருந்துள்ளார். துரை என்றே என்னை அநேகமாக அழைப்பார். அவரது அக்குரல் ஓய்ந்து போய்விட்டது. எனது வேலைப்பழு காரணமாக அவரது இறுதி நிகழ்வில் கூட கலந்து கொள்ள முடியாமல் போனது. என்மனதின் மிகுந்த வேதனையைத் தருகின்றது. என்னோடு மட்டுமல்ல எனது மனைவி பிள்ளைகளோடு கூட மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்வார். தனது உறவினர்கள் நண்பர்கள் எல்லோரையும் தனது கணிப்பில் உயர்த்தித்தான் பார்த்திருப்பார்.

எந்தப் பதவி வகித்தாலும். பெருமைப்படமாட்டார். பொறுமை அவரது சிறப்பான பழக்கம்.

அந்த அன்புள்ளவரை இழந்த அவர் குடும்பத்திற்கு மட்டுமல்ல என் குடும்பத்திற்கும்தான் என்பதைவிட ஊருக்கே அவர் இழப்பு பெரும் இழப்புத்தான்.
அவர் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

பண்ணாகம்

அன்பு சகலன்
ம.துரைசிங்கம்

# என் அன்பிற்கினிய மூத்தம்மானே எங்கே சென்றீர்கள்...?

என்னைச் சீராட்டிப் பாராட்டி பாசத்தைக் காட்டி
தங்கம் தங்கம் என்று அன்பு நிறைந்த
வார்த்தையால் ஆசையாகக் கூப்பிடுவீர்களே!
மூத்தம்மான் இனி எங்கு நான் உங்களின்
குரலைக் கேட்க எங்கே சென்றீர்கள்
என்பிள்ளை தாத்தா தாத்தா என்று
கதைகேட்டு விளையாடும் என
நம்பியிருந்தேனே மூத்தம்மான் தெய்வமே
எல்லாம் பகற்கனவாகி விட்டனவே
நீங்கள் கூட வைத்தியசாலையில்
கூறினீர்களே மூத்தம்மான் முதன் முதலில்
உன் வீட்டுக்குத்தான் வருவேன்
என்று எவ்வளவு ஆசையாகக் கூறினீர்கள்
காலனுக்குக் கூடப் பொறுக்கவில்லையே
மூத்தம்மான் நீங்கள் என் பிள்ளையின்
பிறந்த நாளுக்கு வருவீர்கள் என்று எவ்வளவு
ஆவலுடன் காத்திருந்தேன் எல்லாம்
சுனாமிஅலை போல் ஆகிவிட்டனவே
காலன் அவன் இப்படிச் செய்து விட்டானே
மூத்தம்மான் தெய்வம் நீங்கள் எனது இல்லற
வாழ்வு சிறக்கவேண்டும் என்பதற்காக பல
வழிகளிலும் பாடுபட்டீர்கள் எம்மைப் பெற்றெடுத்த
தந்தைக்குத் தந்தையாக நின்று என்வாழ்க்கைக்கு
அன்பான பண்பான கள்ளம் கபடமற்ற
கணவனைத் தேடித்தந்தீர்களே
நீங்கள் நீண்ட காலம் எம்முடன் இருக்க நாம் கொடுத்து
வைக்கவில்லையே என்ன செய்ய மூத்தம்மான்
எமது துயரைக் காலம் தான் மாற்றும் உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வடக்கம்பரை
அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மருமகள்
R.தங்கம்.

## நாகமுத்து வம்சத்தில்
## நல் வழிகாட்டியாய்
## நம் அண்ணா!

நாகமுத்து வம்சத்தில்
நல்வழிகாட்டி
நம் அண்ணா – கதை சொல்ல
நயப்புடன் விரையும் - என் பேனா

பண்ணாகப் பதியும் பாக்கியத்தினால்
பாக்கியநாதனாய்
மாணிக்கத்தின் மகனாய்
மலர்ந்த எம் அண்ணன்
பெருமை சொல்வதில்
பெருமிதம் கொள்ளும் - என்பேனா

என்ன வழிகாட்டவில்லை
எம் அண்ணா
எழுதிவிட தாள்கள் போதவில்லை

விசுவர் கூட்டம் எனும் எம் வம்சம்
விகடமாக சொல்வதுண்டு
விசரர் கூட்டம்
முற்கோபம் எங்களுக்கு
முதற்சிறப்பு
மூத்தவன் அவனிடத்தில்
காணமாட்டீர்.

என்னவழி காட்டவில்லை
எம் அண்ணா
கடமைகளை கண்ணியமாய் செய்து வந்தான்
கணப்பொழுதும் தயங்கவில்லை – உதவி செய்ய
உழைப்பாலே உத்தமரை சேகரித்தான்
உண்மையுடன் வாழ்ந்ததினால்
உயர்ச்சி பெற்றான் - சமாதான நீதவனாய்

விட்டுக் கொடுப்பதிலும் மிஞ்சிவிட்டான்
பதவியையும் பரம்பரைக் கோவிலையும்
விட்டுவிட்டான்

என்ன வழிகாட்டவில்லை
எம் அண்ணா
எம் அண்ணன் சாந்தி பெற
எம்முருகன் அருள்வேண்டி
விடைபெறும் - என்பேனா

அன்புத்தங்கை
செல்வி. ஆசைமுத்து பிரபாகரி
முகாமைத்துவ உதவியாளர்
தொழிற்துறைத் திணைக்களம்
திருகோணமலை

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்

---

## அருமை நண்பன் ஆத்மா சாந்தி பெறுவதாகுக!

**எனது அன்பு நண்பர் திரு.மாணிக்கம் பாக்கியநாதன் அவர்களின் மறைவு திரு.கிருஷ்ணதுரை அவர்கள் மூலம் அறிந்து அதிர்ந்தேன்.**

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நாம் இருவரும் ஒரேவகுப்பிற் பயின்றோம். அக்காலம் முதல் இது நாள்வரை மிகுந்த அன்புடன் பழகினோம். இவருக்குச் சமாதானநீதிவான் பட்டம் கிடைத்துப் பாராட்டப்பட்டபோது நானும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டேன். பிற்காலத்தில் இயலாதிருந்த காலத்திலும் அவரைச் சந்தித்து அளவளாவினேன். இவரது இறுதிக்கிரியையில் பங்கு பற்றும் பாக்கியம் பெற முடியாமை வருத்தத்திற்குரியது. அவரது நினைவு மலரில் எனது அனுபவங்களைப் பகிர வாய்ப்புக் கிட்டியது பெரும் பேறாகியுள்ளது.**

**அன்னாரது குடும்பததினருக்கு ஆறுதல் கூறுவதுடன் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.**

**அன்பன்**
**கலாபூஷணம் சங்கீதபூஷணம்**
**சுப்பையா கணபதிப்பிள்ளை**

**பொன்னாலை**
**சுழிபுரம். 7.11.2005**

பண்ணாகம் தெற்கு

## ஐக்கிய நாணய சங்கம்

# பெருமைக்குரியவர்

பெரியவரோடு வாழும்காலத்தில் அவருடன் வாழக்கிடைப்பது பெருமை, அவருடன் கலந்து பழகுவது பெருமை, அமரராகியபின் அவரைப்பற்றி நினைப்பது பெருமை, பேசுவது பெருமை, சொல்லக் கேட்பது பெருமை அவர் பற்றி எழுதப்பட்டவற்றை வாசிப்பது பெருமை, இவை எல்லாவற்றுள்ளும் சிறந்தது அவர் பற்றி எழுதுவது

எமது சங்கத்தில் அமரர் அவர்கள் தலைவரில் இருந்து நிர்வாக உறுப்பினர் வரையான சகல பதவிகளிலிருந்தும் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டவர். அமரர் அவர்கள் தமது தலைமையின் கீழ் பணிபுரிந்த காலப்பகுதி மிகவும் மகிழ்ச்சி நிறைந்தது.

எதற்குமே பதட்டப்படாது செய்வதனைச் சரியாகவும், சிறப்பாகவும் செய்வதில் அவருக்கு நிகர் அவரேதான் தவறுகளை முகத்துக்கு நேரே சொல்வதற்கு அஞ்சாதவர் அதுபோன்றே பாராட்ட வேண்டிய வேளையிலும் ஒரு போதும் தயக்கம் காட்டாது. மனந்திறந்து பாராட்டும் பண்பு நிறைந்தவராகவும் காணப்பட்டார்.

பொது அமைப்புக்கள் பலவற்றில் பொருளாளர் பதவியே அவரைத் தேடி வந்தது. அவர் மிகவும் சுத்தமான "கை"யுடையவராக இருந்தார். கணனி போன்று விரைவாகவும், சரியாவும் எத்தகைய பெரிய கணக்கினையும் செய்யும் திறன் கைவரப் பெற்றவர்.

தான் கடமை புரிந்த பொது நிறுவனங்கள் யாவற்றிலும் ஒரு நிரப்ப முடியாத வெற்றிடத்தினை அவர் விட்டுச் சென்றுள்ளார் என்பதனைத் துணிந்து கூற முடியும்.

குறிப்பாக அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரதும் பொதுவாக முழுக்கிராமத்தினரதும் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம். அத்துடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய எமது குலதெய்வமாகிய விசவத்தனை முருகனை வேண்டி வணங்குகின்றோம்.

பண்ணாகம் தெற்கு

**ஐக்கிய நாணய சங்க நிர்வாகத்தினர்**

# அப்பாவுக்கு அப்பாவாக எம்மை வளர்த்த மூத்தம்மானே இனி எங்கு காண்பேனே...

நாங்கள் டென்மார்க்கிலிருந்து ஊருக்கு வந்ததும் நீங்கள் ஓடோடி வந்து "குமார் வந்திட்டியா?" என்று கம்பீரமான குரலில் என்னை அழைப்பீர்கள் என்று ஆசையாகக் காத்திருந்தேனே.

எனது ஆசைகள் எல்லாம் தேன்கூடாகக் கலைந்து விட்டனவே ஐயகோ! என் செய்வேன் முருகப் பெருமானுக்கு தொண்டு செய்தது போதும் வஞ்சகமற்று கலகலவென்று கதைத்தது போதும் பேரக்குழந்தையுடன் கொஞ்சிக் குழாவியது போதும். ஊருக்குச் செய்தது போதும் என்று முருகப் பெருமான் தன்னுடனே அழைத்து விட்டானோ!

எமது சிறுவயது முதல் பள்ளிப்படிப்பு வரை அறிவுரைகள் கூறி நாம் கேட்டதையெல்லாம் வாங்கித்தந்து அன்பாகவும் பண்பாகவும் அப்பாவுக்கு அப்பாவாக எம்மை வளர்த்தீர்களே! மூத்தம்மான் வாறார் என்று அம்மா சொன்னால் காணும் எமது ஆரவாரம் எல்லாம் அடங்கி குண்டூசி வீழ்ந்தால் கூட சத்தம் கேட்கும் என்ற அளவிற்கு மிகவும் அமைதியாக இருப்போம். சிறுவயதில் அப்படி நீங்கள் எம்மை வழி நடத்தினதால் தான் நாம் இன்று இப்படியென்றாலும் இருக்கின்றோம்.

மூத்தம்மான் உங்களை இழந்தது நாம் மட்டுமல்ல. இந்தத் தேசமே வேதனையால் வெம்புகின்றது. உங்களின் செயல்களை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது.

எதுவென்று நான் சொல்வேன் எல்லாமும் என்னோடு வாழட்டும். உங்களுக்கு அண்மையிலிருந்து எங்களின் அனுதாபத்தை உள்ளக்குமுறல்களைத் தெரிவிக்க முடியவில்லை என வருந்துகிறேன். உங்களின் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை வேல்முருகனை வேண்டுகின்றோம்.

மருமகன்

S. குமார் (டென்மார்க்)

# என் தோழன்

கி. பூபாலசிங்கம்
சமாதான நீதவான்
பறாளாய் வீதி
சுழிபுரம்

மறைந்த திருவாளர் மாணிக்கம் பாக்கியநாதன் என்பவரை கடந்த 57 வருடங்களாகத் தெரியும். பாடசாலை தொடக்கம் இறுதிவரை தொழில் ரீதியிலும் குடும்ப இன்ப துன்பங்களிலும் தோழோடு தோள் நின்று எல்லா விதமான உதவிகளையும் ஆற்றியுள்ளார். அன்னாரின் பிரிவு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.

அவர் தன் குடும்பத்திலும் பார்க்க என்னுடனும் என் குடும்பத்துடனும் பழகிய காலங்கள் கூடுதல் என்றே சொல்ல வேண்டும். நீதியான பேச்சு, தடுமாறாத தீர்ப்பு, எதையும் புரிந்து கொள்ளும் தன்மை சுருங்கச் சொன்னால் இவர் ஒரு நிறைகுடம். அவரைப்பற்றி எவ்வளவோ சொல்லாம். இன்னும் பலர் சொல்வார்கள், எழுதுவார்கள் என்பதால் அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரின் இழப்பை சகிக்க முடியாத அவர் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஓய்வு பெற்ற தபாலதிபர்**

# ஏழைக்கு இரங்கியவர்

அரசினர் விக்டோறியாக் கல்லூரியில் ஒருநாள். விளையாட்டுப் போட்டி நடந்தது. ஓட்டப் போட்டி அதில் முதலாவதாக வந்தவர் பண்ணாகத்துப் பொடியன். "யார் இவன்" இரத்தினசிங்கத்தின் மகன். ஓடி வந்தார். கட்டி அணைத்தார்.

"தம்பி என்னைத் தெரியுமா" என்றார்.

"தெரியாது"

"நான்தான்டா உனது பெரியப்பா மாணிக்கத்தின் மூத்த மகன் பாக்கியநாதன்"

பெரியப்புவை யாழ்ப்பாணத்தில் நாம் வாழ்ந்தபோது எமது வீடு வந்து போகும் போது பழகி இருக்கின்றேன். இவருடன் அவ்வளவு நான் பழகியதில்லை. "சிரித்தார்"

"நீ என் சொந்தக்காரன். நீ வென்றதில் எனக்கு மகிழ்ச்சி. "ஓடு நன்றாக ஓடு!" "எல்லாத்திலும் முன்னுக்கு வா" என்றார்.

ஓடினேன் அந்தக் கல்லூரியின் மாணவர் தலைவனாக, துடுப்பாட்ட வீரர் தலைவனாக, உதை பந்தாட்ட வீரனாக அக்கல்லூரியின் கலை கலாச்சார முதல்வனாக ஆனேன். இதுதான் முதன்முதலான அவரை அறிந்து கொண்ட நிகழ்ச்சியின் பலன்.

அதன்பின் அவர் எஸ்.எஸ்.சி. சித்தியடைந்து கல்லூரியை விட்டு வெளியேறினார். நானும் எனது கல்வியை முடித்து சில வருடங்களில் நானும் வெளியேறினேன்.

வேலை எதுவுமில்லாமல் தந்தையை இழந்திருந்த எனது குடும்பத்திற்காக நீர் விநியோக குழாய் பொருத்துபவனாக எனது நண்பன் மா. துரைசிங்கத்துடன் வேலை செய்து உழைத்து வந்தேன்.

ஒரு நாள் " டேய் தம்பி இங்கை வா! இந்த தபாற் கந்தோரில் வேலை பழகு!, எனது லீவு நாளில் நீ வேலை செய்யலாம். இன்னும் வேறு இடங்களுக்கும் உன்னை அனுப்புவேன். பழகு!"

விருப்பமா"

"ஆம்"

பழகிவிட்டேன். அவர் உதவியால் காரைநகர், மூளாய், அராலி, நாகேந்திரமடம், சங்கரத்தை, கரிப்பட்டமுறிப்பு, கனகராயன் குளம் போனற உப தபாற் கந்தோர்களில் அவர்கள் நீண்ட லீவு நாட்களில் வேலை பார்த்தேன். ஓய்வே இல்லை.

திடீரென கொழும்பில் வேலை கிடைத்தது. தவச குறூப் தினபதி, சிந்தாமணி, தந்தி, ராதா பத்திரிகையாலயத்தில் ஒப்பு நோக்காளனாக வேலை கிடைத்தது. நிரந்தர வேலை என்பதனால் அங்கு இவரின் விருப்பமின்றியே சென்றேன்.

ஒரு வருட முடிவில் ஒரு நாள் திடீரென்று "எதுவித தாமதமுமின்றி உடன் வரவும்" என்ற தந்தி வந்தது.

உடனே லீவெடுத்து இங்கு வந்தேன். எந்தக் காரணமும் தெரியாமல் வீட்டில் என்னவோ ஏதோ தெரியாது. தடுமாறிய நிலையில் வந்து சேர்ந்தேன்.

"டேய் தம்பி கிருஷ்ணதுரை உனக்கு சண்டிலிப்பாய் உப தபாற் கந்தோரில் வேலை நான் ஓம் என்று சொல்லிவிட்டேன். டி.ஐ.ரி செல்லத்துரை நீதான் சரியான ஆள் என்று என்னிடம் சொல்லிவிட்டார். "வா டி.ஐ.ரி வீட்டிற்கு இப்பவே போவோம்" சென்றோம் அவரின் அனுமதியுடன் சண்டிலிப்பாய் உப தபாற்கந்தோரில் உப தபாற் கந்தோர் தற்காலிக அதிபராக்கினார்.

பிணைப்பணம் 1000.00கட்ட வேண்டும். என்னிடம் ஏது பணம் "டேய் ஒன்றும் கவலை வேண்டாம். நான் பணம் கட்டுகின்றேன். சம்பளம் எடுத்து மாதம், மாதம் நூறு ரூபா தரவேண்டும் சரியா"

தந்தார்.

பொறுப்பேற்றேன்.

பணி புரிந்தேன் சொன்னபடி செய்தேன்.

ஒரு நாள் திடீர் பரிசோதகர்கள் கந்தோருக்கு வந்து சோதித்தார்கள். 110.00 ரூபா குறைவு எனக் கூறினார்கள். "இருக்காது" திருப்பி கணக்கெடுக்க வேண்டும். என்றேன். திருப்பி கணக்கெடுத்தபோது எதுவித குறைவுமில்லை.

அந்தப் பரிசோதகர் சொன்னார். "இவன் பண்ணாகம் போஸ்ட் மாஸ்டரின் சிஷ்யன்" "கணக்கு வழக்கில் தவறு செய்ய மாட்டான்கள்" அப்படி கணக்கை சீராக வைப்பதில் பெரிய இடத்திலேயே அவருக்கு மதிப்பு. இப்படியான உன்னதமான மனிதரை பாத்திரமறிந்து பிச்சையிட்ட அந்த அண்ணலை என்னால் மறக்க முடியவில்லை.

வாழும் போது ஒருவர் செய்யும் நல்லவைகளை எண்ணிப் பார்க்காத இந்த உலகம் அவர் மறைந்த பின்னரே நினைத்துப் பாப்பதில் ஆர்வம் காட்டுகின்றது. வாழும் போது சிறு பிழைகளும் பெரிதாக தெரிந்தாலும் மாண்டபின் அதனையே சரியாகவும் முடிவு கட்டுவது உலக இயல்பு. அண்ணரும், மனைவியும், மகனும் பல வருடங்கள் என்னுடைய அன்புக்கும் நான் அவர்கள் அன்புக்கும் பாத்திரமாக இருந்துள்ளோம். அந்த புனித அன்பு கூட்டில் ஒருபறவை பறந்துவிட்டது. இருக்கும் உறவுகளுடன் வதனி,அபி என்ற புதிய உறவுகளும் சேர்ந்தன. இனிது வாழ இக் குடும்பத்திற்கு அண்ணா வானிருந்து வாழ்த்துவார் என நம்புகின்றேன்.

எழுத எவ்வளவோ உண்டு இரக்கம் என்பது எல்லோருக்கும் வராது. இரங்குவது இவரது இயல்பு மாணிக்கத்தின் மைந்தனாக மலர்ந்து வாழ்ந்து மறைந்து விட்ட இவர் இழப்பு இவர் குடும்பத்திற்கு மட்டுமல்ல இந்த உள்ளன்பு கொண்ட உறவுகளுக்கும் தான்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் தம்பி



# நெஞ்சில் நிறைந்த மறக்க முடியாத சம்பவங்கள்

க. வாமதேவன் (சமாதான நீதவான்)

பண்ணாகம் அமரர் மாணிக்கம் பாக்கியநாதன் இந்த மண்ணில் 67 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்துள்ளார். இவர் வாழும் காலத்தில் உபதபாலதிபராக, சமாதான நீதிபதியாக கிராம பொதுப்பணிகளில் பொறுப்பான பதவிகளுடன் சேவை செய்த ஒருவராவார். இவரது சேவையின் சிறப்பை, பெருமையை, திறமையை பலரது வாயிலாக அன்று கேட்டு மகிழ்ந்தோம்.

பண்ணாகம் உப தபால் நிலையத்தை ஓர் உயர்தர கருமபீடமாக ஆக்குவதில் தபால் அதிபராக விளங்கிய அமரர் மா.பாக்கியநாதன் பணிகளை நாம் மறக்க முடியாதவர்களாக உள்ளோம். தபால் நிலையத்திற்கு வந்த எந்தவொரு பொது மகனும் வந்த கருமத்தை நிறைவு செய்து மனநிறைவுடன் திரும்பிச் சென்றதை நான் பற்பல நேரங்களில் கண்டுள்ளேன். கந்தோர் படிவங்கள் நிரப்புதல், தந்தி அடித்தல், கடித விலாசங்கள் எழுதுதல் பதிவுத்தபால் கருமங்கள் மற்றும் சகல வேலைகளையும் சலிக்காது தானே நிறைவு செய்வதுடன் எங்களை பணம் சேகரிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதில் வல்லவராக விளங்கினார்.

தனது பதில் உப தபாலதிபராக என்னைப் பதிவு செய்து மிக மிக அவசிய நேரத்தில் மட்டும் லீவு எடுத்து கந்தோர் கருமங்களினைச் செய்ய வைத்து சந்தோஷம் கொண்டார். தனது நண்பர்களான அயலூரிலுள்ள உப தபாலதிபர்களின் அவசிய தேவைக்கு மட்டும் வேலை செய்ய என்னைப் பயன்படுத்திக் கொண்டார். நான் சென்று சேவையாற்றிய உப தபால் நிலைய அதிபர்கள் என்னை மதித்து பெருமைப்படுத்தியதை நான் மறப்பதற்கில்லை.
சுழிபுரம் தபால் நிலைய அதிபர் கட்டுப்பாட்டுக்குள் ஐந்து உப தபால் நிலையங்கள் இருந்து வருகின்றன. இவற்றில் பண்ணாகம் உபதபால் நிலையம் அதிக வேலைகளை நிறைவு செய்யும் முதன்மையான கந்தோராக விளங்கியமையை யாவரும் அறிவர். பல வளங்களும் --

நிறைந்த இடமான வழக்கம்பரையில் பண்ணாகம் உப தபால் நிலையம் அமைந்திருந்தது. இதனால் கந்தோர் தேவைகள் பல நிறையத் தேவை ஏற்பட்டது. பல தேவைகளை நிறைவாக்க நாம் சுழிபுரம் தபாற் கந்தோர், யாழப்பாணம் தபால், தபால் சுப்பிரிண்டன் அலுவலகம் சென்று தேவைகளை நிறைவாக்கிய சம்பவங்கள் இன்றும் எனது நினைவில் உண்டு. தமது மேலதிகாரிகளை தம்பக்கமாக்கி எவ்வித குறைபாடுமில்லாது சேவையாற்றி இளைப்பாறியது எமக்கு பெருமையேயாகும்.

நாம் கந்தரனுபூதிப் பாடல்களை மனனம் செய்விப்பதில் அரும்பாடுபட்டு செயற்படுவதை யாவரும் நன்கு அறிவர். இவரது மாமனார் அமரர் வ. இராமலிங்கம்.நினைவுமலர் வெளியிட்ட வேளை எங்கள் வேண்டுதலை ஏற்று கந்தரனுபூதியை மலரில் இடம் பெறச் செய்துஅன்று எங்கள் மூலமாக அவற்றை சபையில் படிப்பித்து பிரார்த்தனை செய்த நிகழ்வு என்றும் எம்மால் மறக்க முடியாததாகும்.

எங்கள் கிராம மட்ட பொது அமைப்புகளின் நிதிகளை சிறப்பாக வளர்த்து யாவரும் பாராட்டும் வண்ணம் செயற்பட்டதை நாம் மறப்பதற்கில்லை. நோய்களின் தாக்கத்தால் சென்ற ஆண்டு இவர் பாரிய கஷ்டத்தை ஏற்று வாழ்ந்து வந்தார். இதுதான் விதி என்றால் நாம் யாது செய்ய முடியும். இவருக்கு கிடைத்த மனைவி பா. பரமேஸ்வரி மகன், மருமகள், உறவினர் நண்பர்கள் நன்கு கவனித்து உதவுவதை நான் வீடு சென்ற வேளைகளில் கண்ணால் கண்டு மகிழ்ந்தேன். தபாற் கந்தோரில் மக்களுக்குச் செய்த சேவை வீண் போகவில்லை என்று எண்ணி ஆறுதல் அடைந்தேன். இவர் வாழ்ந்த காலத்தில் கிராம மக்கள் சமாதான நீதவான் நியமனம் கிடைத்த போதும், உப தபாலதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற போதும் பாராட்டு விழாக்களை நடாத்தி பெருமைப்படுத்தியதும் நன்றியுள்ள சம்பவங்களாகும்.

இவ்வேளை அமராரின் நினைவாக நாம் வாழும் காலத்தில் நல்ல கருமங்களைச் செய்து தொண்டு செய்வோம், என்ற பணிவான வேண்டுதலுடன் அமரரின் பிரிவால் துயருறும் மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை மற்றும் உறவினர் நண்பர்கள் யாவருக்கும் ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

பண்ணாகம்
சுளிபுரம்

# இரக்கமுள்ள என்மாமா......

அன்புருவாய் அவனியிலே அவதரித்தீர்
உமது அரிய சேவையினால்
ஊரெல்லாம் உவந்து நிற்குது கண்டீர்
சேவையிலே நீர் ஒரு கடமைவீரன்
பாரினிலே புகழ் பெற்ற பண்பாளன்
எங்களிடம் என்னகுறை நீர் கண்டீர்
இடையினிலே எமைவிட்டு ஏன் பிரிந்தீர்
ஆலமரம் நீங்கள் என்று கூடு அடைந்தோம்
அடியோடு வேர் பிடுங்க ஏன் சென்றீர்
பொல்லாத காலன் சொல்லாமல் வந்து
இரக்கமுள்ள என்மாமா நெஞ்சில்
இரக்கமின்றி கை வைத்தானோ
கணவனே தன் கடமை என்றெண்ணிய மாமியும்
கதறியே அழுகின்றார் எந்நாளும்
கண்போல் காத்த என் கணவரும்
தந்தையின்றி தேம்பி அழுகின்றார்
உங்கள் பேரனாம் அபிநயனும்
அப்பப்பாவின் அழகான காலை வணக்கத்திற்கு
விடிந்ததும் காத்தே நிற்கின்றார்.
வாயிற் கதவதனில்
மாற்றான் மகள் என்று மறந்துமே நினைத்ததில்லை
கனிவான வார்த்தையினால் தங்கச்சி என்றழைப்பீர்
சுற்றமெல்லாம் சூழ்ந்திருக்க
யாரை நினைத்து ஓடினீர்கள்
பாவிகள் நாம் அழுகின்றோம்
பாரினிலே நீங்களின்றி
அறிவான மாமனிதரோடு அன்புசால் குணாளனோடு
அருகிருந்து கதைபேச ஆசையாக உள்ளது மாமா
கனிவான வார்த்தைகளும் மதி நிறைந்த முகமும்
மனக்கண்ணே சுழலுது மாமா
அழுகின்ற எம்குரல்கள் செவிப்பறையில் கேட்கலையோ
ஓடியே வந்திடுங்கள் உங்களுக்காக காத்திருக்கின்றோம்.
துள்ளிச் செல்லும் என் பாலனின் துடுப்படக்கி மாமா
பள்ளிக்கு கொண்டு செல்ல வேண்டுமல்லவா
காலனின் கயிறறுத்து என் பாலகனிற்காக ஓடி வாருங்கள்

அன்பு மருமகள் - ம.வதனி

# இவர் போல யார்

எங்கள் அப்பாவின் உடன்பிறந்த தமையன் எங்கள் பெரியப்பா. அவர் எங்களிற்கு பெரிய அப்பாதான். எப்பொழுதும் மலர்ந்த முகமும் எல்லோரிடமும் மனித நேயத்துடன்தான் பழகுவார். எங்கள் கல்வியை பற்றி எப்போதும் கேட்டு அறிந்து கொண்டே இருப்பதுடன் ஆன புத்திமதிகளும் சொல்வார். என் வாழ்வில் அவருடன் பழகிய காலங்களை மறக்கவே முடியாது "அப்புக்கண்ணு" என்று என்னை அழைக்கும்போது மீண்டும் ஒருமுறை அழைக்கமாட்டாரா...? என்று என்மனம் ஏங்கும். அப்படி ஒரு அன்பான அழைப்பு. யாழ் வைத்தியசாலையில் அவர் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது பார்க்கச் சென்ற சமயம் அவர் கண்களில் இருந்து ஓடிய கண்ணீர் கண்டு நானும் கலங்கினேன். மற்றவர்கள் கண்ணீரை துடைக்கும் அவர் கரங்கள் தன் கண்ணீரை துடைக்காமல் ஓய்ந்து விட்டது. எழுந்து நடப்பார் .... பெரியப்பா. சுகம் வரும் என்று எண்ணியிருந்தோம்.

அன்று வந்த அவர் இறப்பின் செய்தியை கேட்டு நானும் என் மனைவியும் கதறி அழுதோம். ஓடி வந்தோம் வீட்டிற்கு அம்மாவும் அப்பாவும் சேர்ந்து அழுதார்கள். எங்களால் அவர் பிரிவை தாங்கவே முடியவில்லை. காலங்கள் மாறினாலும் அவர் மீது நாம் கொண்ட பாசம் மாறாது

"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்"
அவர் இறந்தும் ஊர் அவர் பெயர் சொல்லிக் கொண்டே இருக்கும்

எங்கள் இரத்த உறவுகளுடன் சேர்ந்து அவர் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பெறாமகன்
இ.மணிவர்ணன்
அப்புக்கண்ணு

# என்றும் மறக்க முடியுமா

எனது உற்ற நண்பன் மா. பாக்கியநாதன் . தபால் அதிபர் சிவபதம் அடைந்தார் என்ற செய்தி என்னைப் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடையச் செய்தது. அவரும் நானும் பக்கம் பக்கத்தில் உள்ள அறைகளில் 12 வருடகாலமாக தொழில் புரிந்து வந்தோம். ஆரும் புதியவர்கள் வந்தால் என்னிடம் முத்திரையும், அவரிடம் மருந்தும் கேட்பார்கள். அவருக்கு தபால் கந்தோர் வேலையை விட சமூகத்தொண்டு வேலைதான் அதிகம் இருந்தது. மக்கள் அவரிடம் வந்து கூறும் எல்லைப்பிரச்சனை, கடன்பிரச்சனை என்பனவற்றைத் தீர்த்து வைப்பார். அதனால் நான் அவருக்கு J.P பட்டம் அன்றே வைத்தேன். ஆனால் அவருக்கு 5 வருடம் சென்றபின்தான் J.P பட்டம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. 2 மாதங்களுக்கு முன் அவரைப் பார்க்கச் சென்ற பொழுது அவர் என்னைக் கட்டி அணைத்து வரவேற்றார். பலகாலம் பழகிய என் நண்பனை என்றும் மறக்க முடியுமா?

அவரின் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை முருகன் அருள் புரிவாராக

Dr.க.நடராசா
மூளாய்



# அன்புடன் வளர்த்தவர்

மூத்தண்ணா என்றால் மூத்தவர் என்பது மட்டுமல்ல வாழ்க்கையில் எம்மை எல்லாம் மூத்தவராக வளர ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆதரித்தே அன்புடன் வளர்த்தவர். சின்னஞ்சிறு வயது முதல் அவர் வீட்டில் தான் வளர்ந்து வந்தேன். படிப்பது முதல் உடுப்புக்கள் அணிவதையெல்லாம் கவனமாக அவதானிப்பார். அவரிடம் பயம் கலந்த அன்பு என்னிடம் அப்பவும் இப்பவும் இருந்து கொண்டேதான் இருக்கின்றது.

அவரது உயர் குணங்களை ஊரே அறியும். யாரிடம் கோபம் சாதிக்க மாட்டார். தனது குடும்பமே யாரிடமும் கோபமாக இருந்தால் அதையெல்லாம் இவர் கவனிக்காது எல்லோரையும் மதித்து நடாத்துவார். ஊரிலே இவருக்கு கோபக்காரரோ எதிரிகளோ கிடையாது எவரையும் சமாதானமாக வாழ வழி சொல்லிக் கொடுப்பார். உண்மையில் இவருக்கு கிடைக்க வேண்டிய சமாதான நீதிவான் தகுதி எப்பவோ கிடைத்திருக்க வேண்டியது தாமதமாக கிடைத்தாலும் அந்த பதவியால் இவர் பெருமை உயர்ந்ததோ இல்லையோ இவரால், அந்தப் பதவிக்குத்தான் மரியாதை ஏற்பட்டுள்ளது.

எனது சிறுவயது காலம் முதல் நான் பூப்பெய்திய போது கூட அந்தப் பூப்புனித நீராட்டைக் கூட தன் வீட்டிற்தான் சிறப்புற நடத்தினார். திருமணம் செய்ய நான் வெளிநாடு செய்வதற்கும் துணையாக ஒருவரை பாதுகாப்பிற்காக என்னுடன் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். என் வாழ்நாளில் என்னை அவர் கண்ணன் கண்ணன் என்று அழைக்கும் ஒலியை இனிமேல் கேட்க முடியாது இறுதிச் சடங்கில் கலந்து சொல்லியழ முடியவில்லை. "நாடு இரண்டாக இருப்பதால் முடியவில்லை"

என் வாழ்வில் ஆறுதல் தந்த தெய்வம் அவர் ஆன்மா சாந்தியடைய எனது கணவரும் நானும், எங்கள் மூத்தண்ணா குடும்பத்துடன் சேர்ந்து முருகனை வேண்டுகின்றோம்.

அன்பு தங்கை
திருமதி. வரதராசா இரத்தினேஸ்வரி
"கண்ணன்"

சுவிஸ்
2.11.2005

# கீதாசாரம்

இன்று காணும் இடமெல்லாம் கண்ணனின் கீதாசார உபதேசம் பார்க்க, படிக்கக் கூடியதாக இருக்கின்றது. கண்ணன் இந்த உபதேசங்களை "பாரதப்போரிலேயே எப்பவோ சொல்லி விட்டான்" இது வரை காலமும் கீதாசாரம் இருந்தும் எல்லோருக்கும் தெரிந்திருக்கவில்லை. எல்லோருக்கும் விளங்கும்படியாக எல்லா இடங்களிலும் இப்பொழுது கீதாசாரத்தை காண முடிகின்றது.

இன்று "எது நடந்ததோ" என்று ஒருவர் தொடங்கி விட்டால் மற்றவர் "அதுநன்றாகவே நடந்தது" என்று சாதாரணமாகச் சொல்லும் வகையில் சிறுவர் முதல் பெரியோர் வரை படித்து வைத்துள்ளனர். ஆனால் எத்தனைபேர் அந்த உண்மையை உணர்ந்து கீதாசார உபதேசத்தின்படி வாழுகின்றார்கள். என்பதனை அறிய இந்த கீதாசார விளம்பர, பகிரங்க திருவிளையாட்டை ஆரம்பித்துள்ளான் கண்ணன்.

கண்ணனது பத்தாவது அவதாரம் கலியுகத்தில் என்றால் அந்த "கல்கி" அவதாரம் ஆரம்பமாவதற்கு முன்னர் இப்படியான அறிவுரைகளை எப்படியோ, யார்மூலமோ மனித குலத்திற்கு அறிவிக்கின்றான். அவன் போதனைகளை நன்குணர்ந்து அதன்படி வாழ்வோரை கண்ணன் நிச்சயம் காப்பான்.

பஞ்ச புராணங்கள், ஆழ்வார்கள் பாடல்கள் எல்லாம் இறைவனுக்காக மனிதர்களால் பாடப்பெற்றவை. ஆனால் பகவத்கீதையோ தெய்வத்தால் மனிதனுக்கு உய்யும் வகைகாட்டி உபதேசிக்கப்பெற்றது. ஆகையால் ஒவ்வொரு வீட்டிலும் உறங்கிக் கொண்டிருக்கும் கீதாசாரத்தை படித்து அதன்படி பலன் கிடைக்கும் என நம்புங்கள்.

"கண்ணனை நினைத்தால் சொன்னது பலிக்கும்
காலங்கள் தோறும் நினைத்தது நடக்கும்"

- கிருஷ்ணார்ப்பணம் -



# P.M

மதிப்புக்குரிய P.M அமரராகிவிட்டார் என்ற செய்தி அதிர்ச்சி கொள்ள வைத்தது. ஆம் அவரை இவ்வாறு சொல்வது தான் திருப்தியைத் தருவதாயுள்ளது. மிகவும் குழந்தை மனங் கொண்டவர், எதனையும் வெளிப்படையாகச் சொல்லும் குணம் உள்ளவர் அதேநேரம் ஏதாவது தவறுகளிருப்பின் மன்னிப்புக் கோருவதற்கும், அது போன்றே மன்னிப்பதற்கும் பின் நிற்காதவர்.

வாசிக சாலையிலிருந்து சக நண்பர்கள் தேவையற்ற வாக்குவாதங்களிலும், சச்சரவுகளிலும் அகப்பட்டுக் கொள்ளும் போது மூத்த சகோதரன் போன்று கண்டித்து நல் வழிப்படுத்துபவர்.

அவருடன் பழகிய அந்த இனிய நாட்கள் இப்போதும் கண்களில் காட்சியாக விரிகின்றது. ஒரு போதுமே பெருமை பாராட்டாத எளிய குணம் கொண்டவர்.

"பிறப்பதற்கே ஆளாகி இறக்கின்றாரே"

ஈரவிழிகளுடன்
மணி
டென்மார்க்



# நெஞ்சம் மறப்பதில்லை

" தன்குறை தீர்வுள்ளாய் தளர்ந்து பிறக்கும் வெங்குறை தீர்ப்பிப்பாய் விழுமியோர் திங்கள் கறையிருளை நீக்கருதாதுலகில் நிறையிருளை நீக்குமாக நின்று" என்று ஔவையார் கூறியுள்ளார். மனிதன் பிறக்கிறான். மறைகின்றான். ஆனால் வாழ்க்கையில் ஆற்றிய பணிகளை, விட்டுச் சென்ற நினைவு அலைகளை யாரும் மறக்க முடியாது.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று அப்பரின் அருள் வாக்கு "வையத்துள் வாழ்வாங்கு வாழ்" என்பது வள்ளுவரின் கட்டளை இவற்றை எல்லாம் சிரமேற்கொண்டு நம்முடன் வாழ்ந்தவரே அமரர் மா. பாக்கியநாதன் அவர்கள்.

இவர் எல்லோருக்கும் உண்மை, நேர்மை, கருணை என்பவற்றின் பிறப்பிடம். "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனக் கருத்திற்கொண்டு தனது தபாற் சேவையில் சிறந்து விளங்கி ஓய்வு பெற்றதன் பின்னர் எமது அன்னதான சபையின் பொருளாளர் பதவியில் இருந்து மிகவும் சிறப்பாக சேவையாற்றியுள்ள உத்தமராவார். இவர் தனது சேவைக்காலத்தில் சிறந்த முறையில் எமது சபையின் கணக்குகள் யாவற்றையும் விரிவாக பதிவு செய்து கணக்கறிக்கை சமர்ப்பிப்பார். எவராலும் தவறு ஏதாவது கண்டுபிடிக்க முடியாதவாறு திறம்படச் செயலாற்றினார்.

இத்தகு உயர்பண்பு வாய்ந்த புனிதர் அமரரானார் என்ற செய்தி கேட்டு நாம் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை எங்கள் அன்பர் அணையா விளக்காக மாறிவிட்டார். அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை மற்றும் உடன்பிறப்புக்கள், உறவினர்கள் யாவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

"சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்திலும் மறவோம்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பண்ணாகம்
சுழிபுரம்.

பண்ணாகம்
ஸ்ரீமுருகன் அன்னதான சபையினர்

# இறந்தும் வாழும் இனியவர்

அன்போடு பண்போடு
அனைவரோடு பழகுவதில் சிகரமாய்
எளிமையோடு எல்லோரும்
உறவு கொண்டாடுவதில் அகரமாய்
எம் எண்ணங்களில் என்றென்றும்
வாழும் இனியவரே!
மாணிக்கம் மீனாட்சி செய்த
மாதவத்தால் மண்ணில் அவதரித்த
பாக்கியவான் பாக்கியநாதனுக்கு
பரமசிவன் மகனுக்கு – நீங்கள்
பகலிரவு பாராமல் பரிபாலன சபை வழி
பக்தியுடன் செய்தீர்கள் பற்பல தொண்டுகள்
மண்ணிலே செய்த தொண்டு போதுமென்றோ
விரைவாக விண்ணுக்கு அழைத்தான்
விசவத்தனையான் தன்னோடு
சாதி மத பேதம் கடந்து
சமத்துவமாய் சக மனிதரோடும்
அன்பு மழை பொழிவதில்
அந்த வான்மழைக்கு நிகரானவர்
பிறர் எவர்க்கும் மரியாதை செய்வதில்
நீங்களொரு P.M
இல்லையென்று வருபவர்க்கு
வாரிக் கொடுப்பதில்
முல்லைக்கு தேர் கொடுத்த
பாரியை விஞ்சியவர்
உச்சிக்கு வந்த உதயவன்
உடைந்து வீழ்ந்தது போல்
உங்கள் இழப்பால்
உங்கள் உறவுகளின் நிலை....
ஆணிவேரென நீங்களிருந்த போது
அழகுப் பூங்கொடியாய் இருந்த இல்லாள்
பொட்டிழந்து பூவிழந்து
பொன் தாலிக் கொடியிழந்து
வாடிக்கிடக்கும் மனைவியின்
வாட்டம் போக்க வரவில்லையோ
இடியே வீழ்ந்தாலும் அடிதாங்கும்

இதயம் கொண்ட மகன்
உங்கள் இறப்பால்
உறக்கம் தனையிழந்து
உதட்டிலே வார்த்தையிழந்து
ஊமையாய் கிடக்கும் கோலம்
பார்க்கலையோ
மணமகளாய் மனைவந்த மருமகளை
மருமகளாய் நினைக்காது
மகளாயேற்று மாண்புடன் வளர்த்தீர்
பிள்ளையென்ற சொல்லைத் தவிர
பிற சொல் சொல்லியழைத்ததில்லையென
பேதையவள் சொல்லியழும் குரல் - கேட்கலையோ
துள்ளி வரும் பேரனை
அள்ளியணைத்து கொஞ்சி விளையாடுவீர்கள்
மணித்துளிகள் சிறிது காணாவிட்டாலும்
அபி அபியென தவியாய் தவிப்பீர்கள்
பேரன் மீது பேராசைகள் வைத்திருந்தீர்கள்
பள்ளிசெல்லும் காலம் பேரனுக்கு வந்ததும்
அள்ளியணைத்தவனை அழைத்துச்
சென்று வருவதாகவும்
சிறந்த கல்விச் சாலைதனில் கல்வி பயில்வித்து
சீர்மிகு கல்விமானாயாக்குவதாயும்
அடிமனதில் ஆசைகள் வளர்த்தீர்கள்
அத்தனையும் மறந்து போனதேனோ
சில மனிதர்களோ உயிர் உள்ளபோதே
இறந்து விடுகிறார்கள்
சில மனிதர்களோ உயிர் இறந்த பின்பும்
வாழ்கிறார்கள்
அப்படி வாழ்பவர்களில் நீங்களும் ஒருவர்
ஆண்டவன் சந்நிதியில் அடைக்கலமானவரின்
ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி

க. செல்வரத்தினம் குடும்பம்.
பண்ணாகம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ! வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே! எம்தோழி பரிசு! ஏலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்? நேரிழையீர்
சீசி! இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம்ஆர் ஏலோர்எம்பாவாய்!

முத்தன்ன வெண்ணகையாய் முனவந் தெதிரெழுந்தேன்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றருளித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புண்மைதீர்த் தாற்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கெல்லோ ரெம்பாவாய்

ஒள்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருகக் யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்

மாலறியா நானமுகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாயப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழிச் சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி இது என்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிபே!
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முரேன்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியறியோம் வாழ்த்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்தனற் றில்லைசிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசிவளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்து
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் லம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடி சூழ்கொண்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிச்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியான்
பேரரையாற் கிங்கினே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனர்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைக் குலவி நந்தெம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையோலோ ரெம்பாவாய்

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தெம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணாமலையான் அடிக்கமலங் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்மணித் தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆனாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
தண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடித்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடோலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலேன் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# ஔவையார் அருளிச் செய்த

# நல்வழி

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர் சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி

ஆண்டாண்டு தோறுமழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போமளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் – ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்

சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை – உபாயம்
இதுவே மதியாக மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்




# நன்றி சொல்கின்றோம்.



இறைபதம் சேர்ந்த எம் குடும்பத் தலைவர் அவர்களின் மறைவு எம்மை பெரும் துயரத்தில் ஆழ்த்தியபோதும் அறுபத்தி ஏழு ஆண்டுகளாக அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்த உற்றார், உறவினர் அயலவர் அனைவருக்கும் எம் நன்றிகள்.

யாழ் வைத்தியசாலையில் சிகிச்சையின் போதும், மறைந்த செய்தியறிந்து ஓடோடி வந்து எல்லா வகையாலும் ஆறுதலும், தேறுதலும் கூறி உதவிகள் பல புரிந்த அனைவருக்கும், வெளிநாடுகள், யாழ்ப்பாணத்துக்கு வெளியே இருந்தும் அனுதாபம் தெரிவித்த எல்லோருக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட சங்கங்கள் மன்றங்கள், அன்பர்கள் யாபேருக்கும், அவர் பெருமையை இரங்கல் உரைகள் மூலம் வெளிப்படுத்தியோருக்கும், தாமதமாக செய்தி அறிந்து வீடு வந்து ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், இந்தப் பாசமலரை இவ்வண்ணம் ஒழுங்கமைத்துக் கொடுத்த கலைவாரிதி இ.கிருஷ்ணதுரை அவர்களுக்கும் மலருக்காக ஆக்கங்கள் அளித்த அனைவருக்கும் சிறப்புற அச்சிட்டு புத்தக வடிவில் மலரவைத்த ஸ்ரீவிநாயகர், வழக்கம்பரை உரிமையாளருக்கும் அறிந்தோ அறியாமலோ எவரையாவது தவறவிட்டிருப்பின் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பண்ணாகம்
சுழிபுரம்



நன்றியுடன்
**குடும்பத்தினர்**

-கிருஷ்ணார்ப்பணம்-

# வம்சாவழி

சோதிநாதர் | சின்னட்டியார் + தங்கமுத்து | பண்டாரி | அப்பச்சி | வெற்றிவேலு | ஏகாம

செல்லப்பா | நாகமுத்து | அப்பாப்பிள்ளை | இத்தினிப்பிள்ளை | பார்வதி

சீனிவாசகம் + வ
(சீனிப்பரியார

மாணிக்கம் | ஆசைப்பிள்ளை | செல்லப்பா | அப்பாத்துரை | ஆறுமுகம் | சின்னக்கு

பொற்கொடி + கனகசபை | தங்கம்மா + செல்லையா | மாணிக்கம் + மீனாட்சிப்பிள்ளை | கந்தசாமி + வள்ளியாச்சி | ஆசைமுத் + கனகமணி

பாக்கியநாதன் | இரகுநாதன் + சர்வேஸ்வரி | நகுலேஸ்வரி + சீவரட்ணம் | போகீந்திரன் + சிவனேஸ்வரி

மணிவர்ணன் + தேவதா
ரவிவர்ணன்


சிவகுமார் + ஜெயந்தி
கிருஷ்ணகுமார்
தனேஸ்வரி
தங்கேஸ்வரி + ரவிச்சந்தரன்
கஜேந்திரன்

சிவகுமார்
பிரமிளா
சர்மிளா

மயூரன் + வதனி

அபிநயன்

# வம்சாவழி



பச்சி
வெற்றிவேலு
ஏகாம்பரம்
இராமர்
குமரகுரு
தம்பிநாதர்
இத்தினிப்பிள்ளை
பார்வதி
சீனிவாசகம் + வள்ளியாச்சி
(சீனிப்பரியாரியார்)
ாத்துரை
ஆறுமுகம்
சின்னக்குட்டி
மாரிமுத்து
சின்னப்பிள்ளை
ஆச்சிமுத்து
நல்லமுத்து
கந்தசாமி
+
வள்ளியாச்சி
ஆசைமுத்து
+
கனகமணி
வைரமுத்து
+
இராமலிங்கம்
இராமலிங்கம்
+
தங்கம்மா
போகீந்திரன்
+
சிவனேஸ்வரி
பரமேஸ்வரி
மகேஸ்வரி
+
துரைசிங்கம்
நாகேஸ்வரி
+
விஜயகுமார்
ஜயந்தி
சிவகுமார்
பிரமிளா
சர்மிளா
பிரசாத்
பிரதீப்
பிரநாத்
சந்தரன்
வதனி

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



“இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.”

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

SIVARANJANAM

ஸ்ரீவிநாயகர் – வழக்கம்பரை